மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வேறு எந்தவிதமான நிதியும் என்னிடத்தில் இல்லை. அந்த நிதியை பொதுப்பணித் துறையினர் செலவழிப்பதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம், பொதுப் பணித்துறையின் அந்த அணையிலிருந்து தான் தண்ணீர் வழிந்து சாலை மோசமாக ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே இதை ஊராட்சி மன்றம் செய்ய இயலாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. கே. எ. வகாப்: சாலை போடுவதைப் பற்றிச் சொன்னார்கள், சாலை போடுவது பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்டது தான். ஆகவே தான், இந்தக் கேள்வியை பொதுப்பணித் துறைக்கு அனுப்பினேன். உள்ளாட்சித் துறைக்கு வந்திருக்கிறது. எப்படியாவது இதைச் செய்வதற்கு பொதுப் பணித்துறையோ அல்லது பிற ரோடு சாலைகள் என்று சொன்னார்கள், அந்த துறையில் எடுத்து வேண்டுமானால் செய்யட்டும், சாலை தேவை என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு எப்படியாவது முயற்சி எடுத்து செய்ய வேண்டும், ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நீர் பிடிப்பு ஏற்படுகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட இடையூறுகள் வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக மேற்கொண்டு அதர் ரோட்ஸ் அதில் செய்ய இயலாது என்று தெரிந்தவுடன், அதற்குப் பிறகு வேறு நிதியிலிருந்து செய்வதற்கு இந்த நிதி நிலையில் வழி வகை ஒன்றும் காணப்படவில்லை. அதைத் தனியாக எழுதி அனுப்புவார்களானால் அதைப் பரிசிலனை செய்யச் சொல்லி முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எழுதி அனுப்புகின்றேன்.

Surcharge under Radhapuram Canal System

* 824. *Q.*—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state.—

(*a*) the rate of surcharge proposed to be collected in the areas under the Radhapuram Canal System in Tirunelveli district; and

(*b*) on what basis the surcharge is calculated?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) நெல்லை மாவட்டம் இராதாபுரம் கால்வாய் திட்ட எல்லைக்குள் இருக்கும் நிலங்கள் மீது, உள்ளூர் வரி, மேல் வரி, கீழ்க்கண்ட விதத்தில் வள்ளியூர் இராதாபுரம் ஊராட்சி ஒன்றியங்களால் வசூலிக்கப்படுகிறது.

(1) வள்ளியூர்: அரசினருக்கு செலுத்தப்படும் நிலவரி ஒவ்வொரு ரூபாய் மீதும் இரண்டு ரூபாய்.

(2) இராதாபுரம்: அரசினருக்கு செலுத்தப்படும் நிலவரி ஒவ்வொரு ரூபாய் மீதும் இரண்டரை ரூபாய்.

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 116-வது பிரிவின்படி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் அவ்வூராட்சி ஒன்றிய எல்லைக்குள் இருக்கும் எந்த எந்த நிலத்திற்காகவும் நிலவரி செலுத்துவோர் மீது, அவர்களால் அரசிற்கு செலுத்தப்படும் நிலவரியின் ஒவ்வொரு ரூபாய் மீதும் விதிக்கப்படும் உள்ளூர் வரி 0.45 பைசாவிற்கு கூடுதலாக உள்ளூர் வரி மேல்வரி ஒன்றையும் விதிக்கலாம்.

திரு. டி. கணபதி: தலைவரவர்களே, இராதாபுரம் சேனலில் உள்ள நிலங்களில் அடிப்படை நில வரி, அதன் மீதான செஸ் சர்சார்ஜ், வாய்க்கால் வரி, வாய்க்கால் வரி மீது சர்சார்ஜ் என்று போடப்படுவதால் ஒரு ஏக்கராவுக்கு ரூபாய் 80, 100 வந்து விடுகிறது. இந்தக் கேள்வியை வருவாய் துறை அமைச்சருக்கு அனுப்பியதாக நினைக்கின்றேன். வாய்க்கால் வரியை ரத்து செய்து அபிவிருத்தி வரி என்று வைத்தால் நல்லது. இந்த வரியான ரூபாய் 80 என்பது தமிழ் நாட்டைத் தவிர வேறு எந்த இடத்திலும் இல்லாத நிலைமை இருப்பதால் இதை அரசு பரிசீலனை செய்யுமா. தண்ணீர் வரிக்கு பதிலாக அபிவிருத்தி வரி என்று மாற்ற அரசாங்கம் யோசனை செய்யுமா? ஒரு ஏக்கராவுக்கு ரூ. 80 என்று வசூல் பண்ணக் கூடியதை நிறுத்த அரசு ஏற்பாடு பண்ண முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்த பஞ்சாயத்து மேல் வரிகள் விதிக்கப்படுவது ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில். ஊராட்சி ஒன்றியங்களை 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. நிதி நிலை போதாது. ஊராட்சி ஒன்றியங்கள் அதிகமாக மேல்வரி விதிப்பார்களானால், அதற்கு ஈட்டு மான்யமாக அந்த அளவுத் தொகை வழங்கப்பட்டு, அதனால் பல வேலைத் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் வரியின் மூலம் செய்யப்படுகிறது. இது இராதாபுரம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டுமல்ல. தமிழ் நாட்டில் பல ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 2.50 விதிக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1974 ஏப்ரல் 11

திரு. ரா. ரா. முனுசாமி : கேள்வி நேரத்தில்—இந்த அவையில் முனுசாமி, வீராசாமி, குமாரசாமி என பல சாமிகள் இருப்பதால் சாமி என்பதற்குள் எல்லாக் கேள்விகளையும் வீராசாமி தட்டிக்கொண்டு போகிறார்கள். இப்பேர்ப் பட்ட சாமிகளுக்கு மறுபெயர் சூட்ட நமது பேரவைத் தலைவர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) உறுப்பினர்கள் ஒரு துறைக்கு கேள்வி போட்டு, வேறு துறையிலிருந்து விடை அளிக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்தும் உறுப்பினர் கூற்றுக்கும் அமைச்சர் கூற்றுக்கும் முரண்பாடு இருப்பதாகக் கூறப் படுவது குறித்தும்.

திரு. எம். சுரேந்திரன் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்தில்போது உறுப்பினர்கள்—தாங்கள் கேள்வி போட்ட துறை வேறாகவும், பதிலளிக்கப்படுவது வேறு துறையாகவும்—பொதுப்பணித்துறைக்கு அனுப்பி னேம்—ஊராட்சித் துறையில் இருந்து பதில் அளிக்கப்படுகிறது என்பதாக எல்லாம் குறிப்பிட்டார்கள். இது சம்மந்தமாக வருங்காலத்திலாவது ஒழுங் காக இருக்கும்படியான ரூலிங் தங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறேன்.

அடுத்து இரண்டாவது விவசாயத் துறை அமைச்சர் பதில் சொல்கிற போது, விவசாயக் கல்லூரிகளுக்கு செலக்ட் கமிட்டி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் கீழ் வராது.

திரு. எம். சுரேந்திரன் : மிரட்டி கையெழுத்து வாங்கப்பட்டதாக கோவை செழியன் கூறினார்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் கீழ் வராது. உறுப்பினர் கூறியதற்கும், அமைச்சர் கூறியதற்கும் முரண்பாடு இருந்தால் அதைக் கொண்டு வருவதற்கு வேறு முறை இருக்கிறது.

ஒரு துறைக்கு உறுப்பினர் குறிப்பிட்டு, இன்னொரு துறையில் இருந்து விடை வந்திருப்பது பற்றி சொன்னார்கள். உறுப்பினர்கள் கூட தெரியாமல் ஒரு துறைக்கு அனுப்பிவிடலாம். ஆனால் துறையினர் பரிசீலித்து அதை எந்தத் துறைக்கு அனுப்பவேண்டுமோ அங்கே அனுப்புகிறார்கள். இதில் எந்தவிதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.